Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 11 | 25-05-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 96

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical
கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.
வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (ச-7864)

# இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கு சனாதிபதி சந்திரிகா கடும் எதிர்ப்பு!

## நோர்வே, ஜப்பான் அரசுகளின் செயற்பாட்டிற்கும் கடும் ஆட்சேபம்



(கொழும்பு)

**வடக்கு-கிழக்குப் பகுதிக்கான புதிய இடைக்கால நிர்வாகம் உருவாவதை அனுமதிக்க முடியாது. இது அரசியல் யாப்பின் பிரகாரம் சட்டவிரோதமானது. இதே வேளை நோர்வே அரசும், ஜப்பானும் வரம்புமீறி இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்கும் வகையிலும் நடந்து கொள்கின்றன என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக நேற்று மலை கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

குறுகிய அரசியல் ஆதாயத்திற்காக அரசைக் கலைக்கும் நடவடிக்கையை எடுக்கப்போவதில்லை.

ஆனால் சமாதானத்தின் பேரில் விடுதலைப் புலிகளுக்கு வழங்கும் சலுகைகள் நாட்டின் தேசிய நலனை அச்சுறுத்தினால் நடவடிக்கை எடுப்பேன்.

பேச்சுவார்த்தைகளில் மீண்டும் கலந்துகொள்வதற்கு முன்னர் இடைக்

(08ஆம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் மாநாட்டில் கலந்துகொள்ள ரணில் விக்கிரமசிங்க ஜப்பான் செல்கிறார்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஜப்பான் செல்லவுள்ளார்.

அடுத்த மாதம் ஏழாம் திகதி அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இம்மாநாட்டில் அவர் உரை நிகழ்த்த இருப்பதாகவும் பிரதமர் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஜே.வி.பி - சு.க கூட்டணி ஏற்படின் செயலாளர் பதவியை ஜே.வி.பி.கோரும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான கூட்டணியில் செயலாளர் பதவியை தங்களுக்குத் தருமாறு ஜே.வி.பி கோரியுள்ளது.

அத்துடன் கூட்டணி அரசு அமைக்கும் பட்சத்தில் இரு அமைச்சர்கள் பதவியையும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யுமாறு ஜே.வி.பி கோரியுள்ளது. இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினரான அனுரா பண்டார நாயக்க அமைச்சர் பதவியை ஏற்கக் கூடும் என்று ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தமக்கிடையில் கூட்டணி அமைக்கவும் அடுத்த வருட ஆரம்பத்தில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அரசைக் கலைக்கவும் பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி யும் இணக்கம் கண்டுள்ளன.

## சிறிலங்காக் கடற்படைக்கு பயிற்சி; தாய்லாந்து கடற்படை உறுதி!

(கொழும்பு)

சிறிலங்காக் கடற்படைக்கு பயிற்சிகள் வழங்கவும் தகவல் பரிமாற்றங்களில் ஒத்துழைப்பு வழங்கவும் தாய்லாந்து கடற்படை உறுதிமொழி அளித்துள்ளதாக சிறிலங்கா கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவின் கடற்படைத் தலைமையகத்தில் தாய்லாந்து கடற்படைத்தளபதிகளுக்கும், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரிக்குமிடையே நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி.வெளிவிவகார அமைச்சர் கட்டுநாயக்கா வருகின்றார்

அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் நாளை மாலை கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிறிது நேரம் தங்கிச் செல்லவுள்ளார்.

இன்னொரு நாட்டுக்குச் செல்லும் வழியில் விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்குவதால் சிறிது நேரம் விமான நிலையத்தில் தங்கிச் செல்லவுள்ளார்.

இவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து லால் தர்மபிரிய சந்தித்துப் பேசவுள்ளார்.

### முறிகண்டி ஏ-9 வீதியில்

## பாலை மரக்கிளை முறிந்து விழுந்து இளைஞர் ஒருவர் படுகாயம்

முறிகண்டிப் பகுதியில் பாரிய பாலை மரக்கிளை ஒன்று முறிந்து வீழ்ந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஒருவர் படுகாயமடைந்தார். மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

நேற்றுக் காலை 1.30 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து ஏ-9 வீதிவழியாக வன்னேரிக்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தயாபரன் (வயது-30) என்பவரே காயமடைந்தவராவார்.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகக்கிளை தம்பலகாமத்தில் திறந்து வைப்பு

(திருகோணமலை)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பிரதேசக்கிளை நேற்று முன்தினம் தம்பலகாமத்தில் திறந்து வைக்கப்பட்டது.முன்பள்ளி ஒன்றும் அங்கு திறந்து வைக்கப்பட்டது.

செயலகத்தின் பெயர்ப்பலகையை திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக்திறந்து வைத்தார். திருகோணமலை மாவட்ட தமிழர்புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் மாதவராஜா அலுவலகத்தின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

முன்னதாக முன்பள்ளியை தமிழர் புனர்வாழ் வுக்கழகத்தின் தம்பலகாமம் பிரதேசப் பொறுப்பாளர் திருமலை திறந்துவைத்தார்.



தம்பலகாமம் தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதேச அலுவலகத் திறப்பு விழா நிகழ்வு

### மட்டு. - அம்பாறை மாவட்ட

## தமிழீழ சுகாதார சேவைகள் அலுவலகம் நேற்று திறப்பு

மட்டு.- அம்பாறை மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகள் அலுவலக தொடக்க விழா நேற்று இடம்பெற்றது. இவ்வலுவலகத்தின் பெயர்ப்பலகையை மட்டு.- அம்பாறை பிராந்திய மருத்துவ பொறுப்பாளர் வாமன் திரைநீக்கம் செய்து வைக்க, தமிழீழ இராணுவ மருத்துவ ஆலோசகர் மருத்துவர் எழுமதி கரிகாலன் அலுவலகத்தை திறந்து வைத்தார். மாவீரர் அருச்சுனனின் பெற்றோர் ஈகச் சுடரேற்றி வைத்தனர்.

### மன்னாரில் இம்மாத இறுதியில்

## மகளிர் அமைப்புக்களின் மாபெரும் சங்கமம்

மன்னாரில் மகளிர் அமைப்புக்களின் மாபெரும் சங்கமம் ஒன்று இடம்பெறவுள்ளது. பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வு இம்மாதம் 30,31, மற்றும் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆகிய நாட்களில் இச்சங்கமம் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல மகளிர் அமைப்பினரும் மற்றும் தமிழர் தாயக பிரதேசம்

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஏ-9 வீதி புனரமைப்புக்கு ஒத்திசைவாக கண்ணிவெடியகற்ற விசேட அணி

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 யாழ்சாலை புனரமைப்பிற்கு ஒத்திசைவாக கண்ணிவெடி அகற்றும் பணியில் தற்போது 18 பேர் கொண்ட விசேட அணி மேற்கொண்டு வருகின்றது.

பரந்தனுக்கு வடக்கே இயகச்சிவரை பாலங்களைச் சூழ உள்ள பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணியில் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏ-9 வீதியில் 17 தொகுதி வயல்களில் கண்ணிவெடி வயல்கள் உள்ளதாக இனங்காணப் பெற்றுள்ளது.

இவற்றினை அகற்றி வீதிப்புனரமைப்பு தாமதமின்றி இடம்பெற தமிழர் புனர்வாழ்வுக் கழக ம.நே.க.அ. பிரிவினர் பூரண ஒத்துழைப்பு வழங்கி செயற்படத் தயாராகவுள்ளனர்.

இவர்களுக்கு உதவி நல்குவதற்கு தற்பொழுது ஆர்.டி.ஏ வீதி அபிவிருத்தி அதிகாரசபை சம்மதம் தெரிவித்துள்ளது.

கண்ணிவெடி அகற்றும் பிரிவின் 160 உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கவும் பணிக்கு மருத்துவ வாகனங்களை வழங்கவும் மற்றும் இதர உதவிகள் நல்கிட ஆர்.டீ.ஏ நிறுவனம் முன்வந்துள்ளது.

இதேவேளை ம.நே.க.அ. பிரிவினருக்கு பிரிட்டன் (HALLO FRUS) கண்ணிவெடி தொடர்பான அமைப்பினர் வாகன உதவி நல்கிட முன்வந்துள்ளனர்.

நோர்வே (NPA) மக்கள் அமைபபினர் கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கு 40 பாதுகாப்பு அங்கிகளையும் தலைக்கவசங்களையும் வழங்கியுள்ளனர் (சோ)


## வரிவிளம்பரம்

**விவசாயிகளே!**

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களை குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)


# வற்றாப்பளைப் பொங்கலுக்கான ஏற்பாடுகள் ஆரம்பம்

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 09ஆம் திகதி திங்கட்கிழமை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 22ஆம் திகதி நண்பகல் 12.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இதில் பொங்கல் உற்சவத்திற்கான ஆயத்த வேலைகள் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பது குறித்து ஆலய பரிபாலனசபைத் தலைவரும், செயலாளரும் தமது கருத்துக்களை வழங்கினார்கள். வழமைபோல சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும் என அரச அதிபர் கூறினார்.

இவ்வருடம் சமாதான சூழல் ஆதலினால் பெரும் தொகையான மக்கள் வருகை தரவுள்ளார்கள் என்றும் குறிப்பாக வெளிநாட்டில் வாழும் எமது பகுதி மக்கள் கூடுதலாக வரவுள்ளார்கள் என்றும் அதற்காக சகல வழிகளிலும் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொண்டு தர வேண்டும் என்றும் கோவில் பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (20)

# தமிழ்த்தினப்போட்டி

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் கடந்த 16ஆம் திகதி பாடசாலை மட்ட தமிழ்தினப் போட்டி சிறப்பாக நடைபெற்றுள்ளது.

மேற்படி நிகழ்வானது வித்தியாலய அதிபர் மு.உதயசங்கர் தலைமையில் ஆரம்பமாகி ஆரம்ப நிகழ்வாக தமிழீழத் தேசியக் கொடியினை ஓய்வு பெற்ற கோட்ட கல்வி அதிகாரி த.மார்க்கண்டு ஏற்றிவைத்தார்

மேற்படி போட்டி நிகழ்வுக்கு அயற்பாடசாலைகளின் தமிழ்பட்டதாரி ஆசிரியர்கள் நடுவர்களாகக் கடமையாற்றினர். இந்நிகழ்வுகளுக்கான பிரதம விருந்தினராக முல்லை. வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி இ.சந்திரபாலன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

மேற்படி போட்டியில் இருந்து கோட்டமட்ட போட்டிக்கு மாணவர்கள் தெரிவாகினர். (ஆ)

# ஊற்றுக்கண் தேட்டத்திட்ட மூன்றாவது பரிசில்தெரிவு

## 15 பெண்கள் தகுதி பெற்றனர்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ வைப்பகம் 2000 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய உழைக்கும் பெண்கள் சிறப்புத் தேட்டத் திட்டமான "ஊற்றுக்கண் பெண்கள் தேட்டத்திட்டத்தின்" 03ஆவது பரிசில் தெரிவு நிகழ்வு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்தில் நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் 15 பெண்கள் பரிசிற்கு தகுதி பெற்றுள்ளனர்., இவ்விபரங்களை அருகிலுள்ள தமிழீழ வைப்பகம், கிளைகளில் பார்வையிடலாம் என தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் திரு.ம.கியூ. பேட்அன்ரனி அவர்கள் வழமையாளர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார். (சோ)

# யோகசுவாமி திருவடி நிலைய வழிபாட்டு மண்டபம் திறப்பு



அண்மையில் வன்னேரிக்குளத்திலுள்ள யோகசுவாமிகள் திருவடிநிலையத்தில் சுவாமிகளின் வழிபாட்டு மண்டபம் திறந்துவைக்கப்பட்டது. சுவாமிகளின் திருவடியை அவரது சீடரான தவத்திரு செல்லத்துரை சுவாமிகள் பிரதிஸ்டை செய்துவைத்தார்.

இந்நிகழ்வில் அரச அதிபர் தி.இராசநாயகம், பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன், ஆ.லோகேஸ்வரன், இல்ல செயலாளர் டாக்டர் ச.முருகானந்தன், திருநெறிக்கழத் தலைவர் வே. மகாலிங்கம் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

# கரைவலைப்பாட்டு கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பகுதிக்குட்பட்ட கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள உரிமையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணிக்கு கடற்புலிகளின் அரசியல்துறை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தொழிலில் ஈடுபடும் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கடற்புலிகளின் அரசியல்துறையினர் கேட்டுக்கொள்கின்றனர். (20)

# முல்லைத்தீவுத் தபாலகம் மீண்டும் ஆரம்பமாகியது

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்ட அஞ்சல் அலுவலகம் கடந்த 21ஆம் திகதி தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

முல்லை. மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் வி.குமரகுரு தலைமையில் இது தொடர்பான ஆரம்பநிகழ்வு பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

நிகழ்வில் ஆசியுரைகளை அளம்பில் பகுதி பங்குத்தந்தை யூட் அமலதாஸ் அடிகளார், கள்ளப்பாடு வைரவர் ஆலயக்குருக்கள் தங்க வேலாயுதம் ஆகியோர் வழங்கினர் முதல் முத்திரையை உதவி அரசாங்க அதிபர் (தலைமைப்பீடம்) மு.கிருஸ்ணபிள்ளை பெற்றுக் கொண்டு பணிகளை ஆரம்பித்தார் முல்லை. மாவட்ட அஞ்சல் அதிபராக வே.இராமச்சந்திரன் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது. (20)

# தாய். கடற்படைத் தளபதி சிறிலங்காவுக்கு வருகை

(கொழும்பு)

தாய்லாந்தின் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் டாவிசாஸ் சோமபாபா நேற்று முன்தினம் சிறிலங்கா வந்துள்ளார்.

சிறிலங்காவின் அழைப்பை ஏற்று வருகைதந்த தாய்லாந்து கடற்படைத் தளபதி இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு நடவடிக்கைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து இவருடன் ஆராயப்படவுள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறிலங்காவில் ஐந்து நாட்கள் தங்கியிருக்கும் இவர் முப்படைகளின் தளபதிகளுடனும் உயர் பாதுகாப்பு அதிகாரிகளுடனும் கலந்துரையாடவுள்ளார்.

# வித்தியானந்தாக்கல்லூரியில் மென்பந்து, வலைப்பந்தாட்டம்

வட-கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சின் மென்பந்தாட்ட, வலைப்பந்தாட்டப் போட்டிகள் தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இன்றும் இப்போட்டி நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகள் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.00 மணிமுதல் மாலைவரை நடைபெறுவதோடு இப்போட்டிகளில் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட எட்டு மாவட்டத்தையும் உள்ளடக்கியே நடைபெறவுள்ளது. (பா)



கடந்த 20 வருடங்களுக்கு மேலாக எவ்வித புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படாதிருந்த திருநகர் வீதியின் புனரமைப்பின் ஆரம்பப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதைப் படத்தில் காண்க...

# உணவுப் பொருட்கள் சேகரிப்பு

தென்னிலங்கையில் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறையினர் ஊடாக மக்களிடமிருந்தும் வர்த்தக சங்கத்திடமிருந்தும் பொது அமைப்புக்களிடமிருந்தும் அரிசி, பால்மா, உடுபுடவைகள் போன்ற பொருட்கள் சேகரிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. (12)

# விடுதி வசதி வழங்கக் கோரி மாணவர் போராட்டம்

பேராதனைப்பல்கலைக்கழக இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்கள் விடுதிவசதி வழங்கப் படாததற்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த புதன் கிழமை இரவு முதல் உபவேந்தர் காரியாலயத்தின் முன்பகுதியில், தூண்களை சுற்றி வளைத்து புடவைகளால் கட்டி கூடாரம் போல அமைத்து அதற்குள் தங்கியிருக்கின்றனர்.

சுமார் 300 மாணவ, மாணவியர் இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் தொடக்கம் விரிவுரைகளைப் பகிஷ்கரித்துள்ளனர்.

தூண்களில் கட்டப்பட்டுள்ள புடவைகளில் புதன்கிழமை நடைபெற்ற ஆர்பாட்டத்தின் போது பயன் படுத்தப்பட்ட பதாதைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன.

# ஒருங்கிணைப்பு அலுவலகம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இயங்கும் மனிதநேயக் கண்ணி வெடியகற்றும் பிரிவினரால் வன்னிப் பிராந்தியத்தில் கண்ணிவெடி அகற்றுதல் சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்குமான தலைமை ஒருங்கிணைப்பு அலுவலகம் திறக்கப்படவுள்ளது. இங்கு கிளைப் பணிகளான பணிதர ஆய்வு அணிகள், கண்ணிவெடி விழிப்புணர்வு அணிகள், நடவடிக்கை ஒருங்கிணைப்பு அணிகள், நிர்வாகம், கண்ணிவெடி செயற்பாட்டு தகவல் பரிமாற்றம் என வகுக்கப்பட்டு சர்வதேச அளவில் இவ் அலுவலகம் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்க (சோ)


## நன்றி தெரிவிக்கின்றேன்

### களவு போன நகை மீட்கப்பட்டது

16-05-2003 அன்று களவு போன 30.000/= பெறுமதியான நகையை கிளிநொச்சி காவல்பணிமனையைச் சேர்ந்த ஆ.கிருபன் விசாரணை செய்து மீட்டுத்தந்துள்ளார் எனவே அவருக்கும் அவரது பணிமனையினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இவர்கள் இதுபோல சிறப்பாகத் தமது கடமையைச் செய்ய எனது நல்வாழ்த்துக்கள்.

**செ.பர்னாந்து (குணம்)**

இல.35 ஜெயந்திநகர், கிளிநொசசி.

(2284)



## துயர் பகிர்கின்றோம்

**திரு. பரலோகராசா**

**(இரத்தினம்).**



காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருவையாறை வசிப்பிடமாகக் கொண்ட பரலோகராசா 23-5-2003 அன்று இறைபதம் எய்தியுள்ளார். அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**தனியார் மினிபஸ் ஊழியர், கிளிநொச்சி.**

(3286)

# ஈராக்கில் நிர்வாகக் கட்டமைப்புக்கள் அமெரிக்க அதிகாரியினால் கலைப்பு

## – சதாம் ஆதரவாளர்களுக்கும் பங்கேற்கத் தடை

**ஈராக்கிலுள்ள பல்வேறு நிர்வாகக் கட்டமைப்புக்களைக் கலைத்து விட அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது. ஈராக்கின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக அமெரிக்க சனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரியான போல் பிறேமர் இதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.**

இதற்கமைய பாதுகாப்பு, தகவல் தொடர்பு, படைத்துறை ஆகிய அமைச்சுக்களும் நீதி நிர்வாகம் மற்றும் ஒலிம்பிக் குழு போன்ற அமைப்புக்களும் கலைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டும் நடவடிக்கைகளில் அவ் அதிகாரி இறங்கியுள்ளார்.

அத்துடன் சதாம் ஹுசைனின் பாத் கட்சி உறுப்பினர்கள் நிர்வாகத்தில் அங்கம் வகிப்பதையும் அவர் தடைவிதித்துள்ளார்.

சதாம் ஹுசைன் மற்றும் அவரின் ஆதரவாளர்களின் ஆதிக்கத்தை மட்டுப்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் ஈராக் தொடர்பாக அமெரிக்கா முன்வைக்கும் தீர்மானம் வெற்றியடைந்துள்ள சூழ்நிலையில் இத்தகைய நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈராக்கில் முறையான நிர்வாகம் அமைக்கப்படும் வரையில் அந்த நாட்டின் நிர்வாகத்தைத் தாங்கள் நடாத்த அங்கீகரிக்க அமெரிக்கா மற்றும் பிரித்தானிய நாடுகள் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் தீர்மானம் முன்வைத்துள்ளன.

இத்தீர்மானத்தை ஈராக் மீதான போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த ஜேர்மனி, ரஷ்யா, பிரான்ஸ் உட்பட அனைத்து உறுப்பு நாடுகளும் ஆதரித்த நிலையில் அந்த தீர்மானம் வெற்றிபெற்றுள்ளது.

ஆனால் சிரியா இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் வெளிநடப்புச் செய்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஈராக்கில் சமூக சீர்கேடான நடவடிக்கைகள் மிக வேகமாகப் பரவி வருவதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இஸ்ரேலிய இராணுவ புல்டோசரொன்று இராணுவ நடவடிக்கையில் மேற்குக் கரை கெப்றோனில் பலஸ்தீன கட்டடமொன்றை அழிக்கிறது.

## பலியானோர் 1600 ஆக உயர்வு

அல்ஜீரியாவில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற நிலநடுக்கத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1600ஆக உயர்ந்துள்ளது. இத்தொகை மேலும் உயரக் கூடும் என்று அல்ஜீரியப் பிரதமர் கூறியுள்ளார்.

7200 பேர் காயமுற்றுள்ளனர். நூற்றுக் கணக்கானவர்களை இன்னும் காணவில்லை. மீட்புப் பணிகள் தொடர்கின்றன.

## பாராளுமன்றம், பிக்பென் கோபுரம் முன்பாக கொங்கிறீட் தடைகள்!

(லண்டன்)

லண்டனில் பாராளுமன்றத்துக்குள்ளும் பிக்பென் கோபுரத்துக்குள்ளும் வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட வாகனங்கள் நுழைவதைத் தடுக்கும் வகையில் கனதியான கொங்கிறீட் கட்டுகள் தயாரிக்கப்பட்டு அவற்றைக் கொண்டு தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பயங்கரவாதத்தின் மீதான அமெரிக்கா தலைமையிலான யுத்தத்திற்கு பிரிட்டன் ஆதரவு தெரிவித்து வருவதால் பிரிட்டன் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்று அந்த நாடு நீண்ட நாட்களாகவே அச்சம் அடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆர்ஷே மாகாண மக்களுக்கு; புதிய அடையாள அட்டைகள்!

ஆர்ஷே மாகாணத்தில் வாழும் சகல பொது மக்களும் புதிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும்படி இராணுவ அதிகாரிகளால் கேட்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பிரிவினை கோரும் கிளர்ச்சிவாதிகள் பொதுமக்களிடம் கலந்து பழகுவதை நிறுத்த முடியும் என்பது அரசினது நோக்கமாகும்.

இராணுவப் பேச்சாளர் கருத்துக் கூறுகையில்; உள்ளூர் இராணுவம், உள்ளூர் பொலிஸ், உள்ளூர் மாவட்ட அதிகாரிகளின் கையொப்பம் அந்த அடையாள அட்டையில் இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். சமீப காலமாக ஆர்ஷே மக்களின் அடையாள அட்டைகளைப் பிரிவினை கோரும் கிளர்ச்சிவாதிகள் அபகரித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## இஸ்ரேல்-பலஸ்தீன சமாதான முயற்சிக்கு மும்முனை உச்சி மாநாட்டுத் திட்டம்!

### -அமெரிக்க சனாதிபதி ஆராய்கிறார்

(வாஷிங்டன்)

மத்திய கிழக்கு சமாதான முயற்சிக்கு உதவும் வகையில் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் சரோன் பாலஸ்தீனப் பிரதமர் மகுமட்அபாஸும் கலந்து கொள்ளும் உச்சி மாநாடொன்றை நடத்துவது குறித்து தாம் பரிசீலனை செய்து வருவதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூபுஷ் தெரிவித்துள்ளார்.

சமாதனத்துக்கான சர்வதேசத் திட்டத்தை இஸ்ரேலியத் தலைவர் ஏற்றுக் கொண்டதை அடுத்து மும்முனை உச்சி மாநாடு ஒன்றை ஜூன் மாதம் முற்பகுதியில் நடத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் அல்லது எகிப்திய, செங்கடல்ப் பிரதேசத்தில் இந்த உச்சிமாநாட்டை நடத்தலாம் என்று புஷ் கூறியுள்ளார்.

இஸ்ரேலியப் பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த குண்டு வெடிப்புக்களால் இஸ்ரேல் பலஸ்தீனத் தரப்பினரிடையிலான உறவில் மீண்டும் விரிசல் ஏற்பட்டதுடன் சமாதான முயற்சிகளையும் அது பெரிதும் பாதித்துள்ளமை தெரிந்ததே.

## முஷாரப்புடன் உடனடி பேச்சுக்கு திட்டமில்லை

### – பிரதமர் வாஜ்பாய்

(புதுடில்லி)

பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷராப்புடன் உடனடியாகச் சந்தித்துப் பேசுவது குறித்துத் திட்டம் ஏதுமில்லை என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

ஜேர்மனி நாளிதழ் ஒன்றிற்கு அவர் பேட்டி அளிக்கையிலேயே இதனைக் கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தைக்கு வருமாறு பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி அழைத்திருப்பதைத் தெரிவித்த பிரதமர், உயர்மட்ட அளவிலான பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை பாகிஸ்தான் படிப்படியாக ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைத் தடுக்கவும், பயங்கரவாத பயிற்சி முகாம்களுக்கு அளிக்கப்பட்டு வரும் அடிப்படை வசதிகளையும் ரத்துச் செய்ய வேண்டும் என்று அவர் பாகிஸ்தானை கேட்டுக் கொண்டுள்ளார்.

அடுத்த மாதம் பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் நடைபெறும் ஜி-8 கூட்டத்தில் பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பும், இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் கலந்து கொள்ளவுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா.பிரதிநிதி நியமனம்

ஈராக்கில் ஐ.நா.வின் சிறப்பு பிரதிநிதியாக 04 மாதங்களுக்கு ஐ.நா. மனித உரிமைகள் தலைவர் ஷேய்ரியோ யுவராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் போரினால் சீரழிந்துள்ள ஈராக்கை சீரமைத்திட அமெரிக்கா, பிரிட்டனுடன் சேர்ந்து செயற்படுவார் என்று கூறப்படுகின்றது.

## சார்ஸினால் பாதிப்பு

தாய்வானில் 10 பேருக்கும் கனடாவில் 5 பேருக்கும் புதிதாக சார்ஸ் வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தாய்வானில் இவர்களுடன் 548 பேர் வைரஸ் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் எவரும் மரணத்தைத் தழுவியதாக அறிவிக்கப்படவில்லை.

அதேபோல் கனடாவில் ரொறொண்டோவில் புதிதாக 05 பேருக்குச் சார்ஸ்வைரஸ் தொற்றியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

இதுவரை கனடாவில் 24 பேர் சார்ஸினால் இறந்துள்ளனர்.



லத்தீன் அமெரிக்க நாடுகளின் மாநாடொன்றில் பங்கேற்ற (இடமிருந்து வலமாக) மெக்சிக்கன் சனாதிபதி வின்சென்ற் பொக்ஸ், பனாமா உதவி சனாதிபதி ஆர்குறோ பலறினோ. டொமினிக்கன் குடியரசு உதவி சனாதிபதி மிலாக்றோஸ் ஓர்ரீஸ் புஷ், வெனிசுலா சனாதிபதி கொகோ சவஸ்

## நல்லெண்ண சமிக்ஞை

(ரெல்அவிவ்)

அமெரிக்கா ஆதரவிலான மேற்காசிய அமைதித்திட்டத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ளதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

இந்தத் திட்டத்தை தமது அமைச்சரவையில் ஒப்புதலுக்கு அனுப்பப் போவதாக இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் கூறியுள்ளார்.

இந்த அமைதித் திட்டத்தை ஷெரோன் ஏற்றுக்கொண்டது பெரும் முன்னேற்றம் என அமெரிக்க சனாதிபதி புஷ் கூறியுள்ளார்.



பாரிய நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட அல்ஜீரியாவின் போமென்டொஸ் பகுதியில் வெளியொன்றில் படுத்துறங்கும் அல்ஜீரியர்கள்.



மூன்று வயதான ஓயின் சம்பற் என்ற கம்போடிய சிறுவன் தனது உற்ற நண்பியான லக்கி என்ற மலைப் பாம்புடன் விளையாடுகிறான்.

# நியூசிலாந்து கிண்ணத்தைக் கைப்பற்றியது

சிறிலங்கா, பாகிஸ்தான் அணிகள் கலந்து கொண்ட அல்பலாஹ் கிண்ணத் துக் கான முக்கோணத் தொடரில் பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்து நியூசிலாந்து அணி கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

தம்புள்ளை ரன்கிரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொடர் விளையாட்டு ரசிகர்களினது எதிர்பார்ப்புக் களைப் பொய்யாக்கியதாக நேற்று முன்தினம் நிறைவுபெற்றது.

ஏழு போட்டிகள் கொண்ட இத்தொடரில் மூன்று போட்டிகள் தம்புள்ளையிலும், மூன்று போட்டிகள் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்திலும் இறுதிப் போட்டி பிரேமதாஸ அரங்கிலும் நடைபெற இருந்தது. ஆனால் சிறிலங்காவில் அண்மையில் நிலவிய மோசமான சீரற்ற காலநிலையால் அனைத்துப் போட்டி களையும் தம்புள்ளையில் நடத்த வேண்டிய கட்டாய நிலைக்குச் சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தள்ளப் பட்டது. இது சொந்த மண்ணில் புதிய தலைமையிலான சிறிலங்கா அணி இறுதிப் போட்டி வாய்ப்பை இழக்கும் நிலையையும் உருவாக்கியது.

ஆரம்பப் போட்டியிலேயே பாகிஸ்தான் அணியிடம் தோல்வி அடைந்த சிறிலங்கா இறுதிப் போட்டிக்கான வாய்ப்பைப் பெறுமா என்ற சந்தேகம் அனைவரிடமும் பொதுவாக நிலவிய கருத்தே. இருந்தும் அடுத்தடுத்து இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்று பத்துப் புள்ளிகளைப் பெற்று முன்னணியில் திகழ்ந்த சிறிலங்கா அணி நியூசிலாந்து அணியுடனான இறுதி லீக் போட்டியில் 157 என்ற வெற்றி இலக்கை எட்ட முடியாது தோல்வியுற்று பாகிஸ்தான் அணியின் தோல்விக்காக ஏங்கியது. அது கைகூடாது போக இறுதிப் போட்டி வாய்ப்பை இழந்தது. இது போன்ற நிலை நடந்து முடிந்த உலகக்கிண்ணப் போட்டியில் நியூசிலாந்து அணி இறுதிப் போட்டியில் கைக்கொண்டதைக் காண முடிந்தது. ஆனால் துடுப்பாட்டத்தில் மந்த கதியில் உள்ள சிறிலங்கா அணி வெற்றி இலக்கை நோக்கி இரண்டுமுறை இதுபோன்று ஆடிய போதும் தோல்வியையே சந்தித்தது. இந்நிலையில் ஆடுகளமா அன்றி வீரர்களின் திறமையின்மையா காரணம் என்பதை ஆராய்வது முக்கியமானது.



வழமையாக முதலில் துடுப்பெடுத்தாடும் ஒரு அணி 250 ற்கும் 270 இற்கும் இடையில் ஓட்டங்களைக் குவிக்கும் போதே அந்தப் போட்டி விறுவிறுப்பை ஏற்படுத்தி ரசிகர்களும் அந்தப் போட்டியைக் கண்டு களிக்க ஆவல் கொள்வர். ஆனால் தம்புள்ளை போன்ற மைதானங்கள் அதனை ஏற்படுத்தத் தவறி விடுகின்றன. இது ஒரு நாள் போட்டியின் முக்கியத்துவத்தைக் குறைத்து விடுவதாக அமைந்து விடுகின்றது.

## இறுதிப் போட்டி வாய்ப்பை இழந்த சிறிலங்கா



சிறிலங்காவுக்குச் சாதகமாக அமைந்தது. (நியூசிலாந்து அணியுடனான இந்தியாவின் வெற்றி மூலம்) சொந்த மண்ணில் சிறிலங்கா அணிக்கு ஏற்பட்டுள்ள இப்பின்னடைவு அவ்வணியின் பலமற்ற தன்மையையே எடுத்துக் காட்டுவதுடன் அணியின் ஸ்திரமற்ற நிலையை உணர முடிகின்றது.

இது இவ்வாறிருக்க டெஸ்ட் போட்டிகளுக்கு சாதகமற்றதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ள தம்புள்ளை ஆடுகளம் எதிர்காலத்தில் ஒருநாள் போட்டிகளுக்கும் சாதக மற்றதாக அறிவிக்கப்படும் நிலை உருவாகுமா? என்பது ரசிகர்களினது ஏக்கமாக வுள்ளது.

துடுப்பாட்டத்துக்கு அறவே சாதகமற்ற இந்த மைதானத்தில் பாகிஸ்தான் அணி மாத்திரம் ஒரு போட்டியில் 200 ஓட்டங்களை எட்டியுள்ளது. அந்தளவிற்கு மிக மோசமான இந்த ஆடுகளத்தில் துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டம் பெற முடியாது திணறடிக்கப்பட்டனர் என்றால் மிகையில்லை.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடும் அணி 200 ஓட்டங்களுக்குக் குறைவான ஓட்டங்களைப் பெறும் போது எதிர் அணி 2 டெஸ்ட் போட்டியில் ஓட்டங்களைப் பெறுவது போல் ஆடி வெற்றி பெற்று வருகின்றன. இது போன்ற நிலையை

மேற்படி கிண்ணத்தை நியூசிலாந்து சுவீகரித்ததன் மூலம் 2000 ஆம் ஆண்டின் பின்னர் பெறப்பட்ட முதலாவது சாம்பியன் கிண்ணம் என்ற பெருமையை நியூசிலாந்து பெறுகின்றது. அப்போது மினி உலகக்கிண்ணத்தை இந்தியாவுக்கு எதிராக ஆடி சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது.

□□□

# அஸ்தமனமாகவில்லை



நீண்டகாலத்தின் பின் உதை பந்தாட்டத்தில் கிளி.மாவட்ட ரசிகர்களிடம் ஓரளவேனும் திருப்தியை ஏற்படுத்த முயன்று மிகவும் நம்பிக்கையோடும் இலட்சியத்தின் ஆவலோடும் களம் இறங்கி யாழ்.மாவட்ட அணியோடு மிகத் திறமையாக விளையாடிய கிளிநொச்சி மாவட்ட லீக் அணி தனது எதிர் காலத்திற்கான ஒரு மைல் கல்லாக கடந்த 15 ஆம் திகதியன்று கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற லீக்குகளுக்கிடையிலான உதை பந்தாட்டப் போட்டியின் போது நிரூபித்துள்ளது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மாவட்ட லீக் அணி வாயு பகவானின் சீற்றம் அன்று கடுமையாக இருந்தமையால் தாக்கி ஆடும் பக்கத்தைத் தெரிவு செய்தது. இது ஆட்டத்தின் முதல் பாதியில் கிளி.மாவட்ட அணி ஒரு கோலைப் போட உதவியது. அத்தோடு விறுவிறுப்பாக இரு அணிகளும் மோதுகையில் கிளி. மாவட்ட லீக் அணி தனக்கெனக் கிடைத்த கோல் பெறும் பல வாய்ப்புக்களைத் தவற விட்டதைக் காணக் கூடியதாக இருந்தது. அதே போன்று யாழ் மாவட்ட அணியும் ரசிகர் களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில் விளையாடாததைக் காண முடிந்தது. இந்நிலையில் யாழ். மாவட்ட லீக் அணி ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் கிளிநொச்சி லீக் அணிக்குச் சவாலாக விளங்குவதுடன் வெற்றிக்கான கோல்களைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப் பட்ட வேளையில் அவர்களின் அனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்தது. இந் நிலையில் கிளிநொச்சி லீக் அணி வெற்றி பெற்றுவிட்டது என நினைத்துக் குதூகலிக்கும் இறுதி வேளையில் (போட்டி நிறைவடைய 4 நிமிடம்) யாழ். மாவட்ட லீக் அணி கோல் ஒன்றைப் போட்டுப் போட்டியைச் சமநிலைக்குக் கொண்டு வந்தது. திசை திருப்பிய இப்போட்டி பிரத்தியேக நேரம் கொடுக்க வாய்ப்பற்ற நிலையில் இரு அணித் தலைவர்களின் சம்மதத் துடன் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்க முடிவெடுக்கப்பட்டு இதன் மூலம் யாழ்மாவட்ட லீக் அணியைத் தோற்கடிக்கும் முதலாவது வாய்ப்பு நழுவியது.

இருந்த போதும் நடந்து முடிந்த போட்டியில் நாமும் சளைத்தவர்கள் இல்லை என்ற முறையில் ஓரளவு திருப்தி படக் கூடிய வகையில் கிளி.மாவட்ட லீக் அணியின் வீரர்கள் திறமையாக விளையாடியதைக் காணக் கூடியதாக இருந்தது.


ஏற்கனவே லீக் மற்றும் போட்டிகளில் கிளி. மாவட்ட அணி வடக்குக் கிழக்கில் உள்ள மாவட்டங்கள் அனைத்திற்குள்ளும் பின்தங்கி மிகவும் மோசமான நிலையில் இருந்தமையால் உண்மையிலேயே கிளி.மாவட்ட ரசிகர்கள் வேதனைப்பட்டே இருந்தனர். கடந்த வருட யாழ். மாவட்டத்துடனான போட்டியில் 6-0 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்றமையும் இம்முறை இந்தப் பெறுபேற்றைத் தக்க வைப்பதே பெரிய திறமை என விளையாட்டில் முக்கியஸ்தர்களும் ரசிகர்களும் எதிர் பார்க்க வியப்பில் ஆழ்த்தியதாக இப்போட்டி அமைந்திருந்தது தெளிவாகின்றது.

திறமை என்பது ஒளிந்து கிடக்கின்றது. பயிற்சி என்பது விடுமுறையில் நிற்கின்றது. இருந்தும் நமக்கென உள்ள தனித் திறமைகளால் விளையாடிச் சாதிக்க முயன்ற வீரர்கள் விடுதலைபெற்றுத் தூங்கும் பயிற்சியைத் தட்டியெழுப்பி தம் விளையாட்டு மைதானத்திற்குக்கு இழுத்து வருவார்களாயின் யாழ்.மாவட்ட அணி மாத்திரமல்ல எந்தவொரு அணியையும் நிச்சயம் வெற்றி கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இதனை அன்று நிரூபித்துக் காட்டிய அணியின் அபார ஆட்டத்தால் தன்னிலை மீறிய ரசிகர்கள் தம்மை மறந்து சந்தோசப் பூரிப்பில் துள்ளியெழுந்து அன்றைய தண்ட உதைபார்க்க துடித்தவேளை ரசிகர்கள் ஒழுங்குகளை மீறியமையும்; அதனை ஏற்பாட்டாளர் கட்டுப்படுத்த முயன்றதும் வேதனை அளிப்பதாக இருந்தது. ஒருவர் குதூகலிப்பில் தன்னை மறந்து எங்கே எமது அணி வெல்லப் போகிறதோ என்று அவாக்கொள்வது வழமையானதே.

ஒருபோட்டி நடைபெறும் போது அதற்கான பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். இருப்பினும் ரசிகர்கள் தம்மை மறந்து உணர்ச்சி வசப்படுவது இங்கு மட்டுமல்ல சர்வதேச ரீதியிலேயே நடக்கும் சர்வ சாதாரண நிகழ்வே. விளையாட்டு என்றால் என்ன? எதற்காக விளையாட்டுக்கள் ஆடப்பட வேண்டும்? இதனால் ஒவ்வொரு ஜீவனும் எதனைப் பெற்றுக் கொள்கின்றன? என்பதற்கான விடையை தலைகீழாய் மாற்றிய அன்றைய நிகழ்வு இனியும் எமது மாவட்டத்தில் எங்கே போட்டியோ அங்கே என்று எதிர்பார்ப்போடு ஓடிவரும் ஏராளம் பார்வையாளரில் எவருக்கும் நடக்கக் கூடாது என்பதே விளையாட்டு ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாகும்.

◄◄◄



## ரசிகர்களுக்கு திருப்தியை ஏற்படுத்திய போட்டி

விளையாட்டு அரங்கு

- ஜெயந்திரன்

# ஏ-9 வீதி புனரமைப்பு

# நத்தை வேகத்தில் நகர்கிறது!

மிருசுவிலிலிருந்து ஓமந்தை வரையும் உள்ள ஏ-9 பிரதான வீதியின் புனரமைப்பு வேலைகள் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு தற்போதும் நடைபெற்று வருகின்றன.

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி பணியானது தற்காலிக புனரமைப்புப் பணியாக அதுவும் உடனடிப் புனரமைப்புப் பணியாகயாகவே ஆரம்பிக்கப்பட்டது.



மேற்படி வீதியில் வாகனப் போக்குவரத்து அதிகரிப்பினையடுத்து வாகன விபத்துக்கள் தொடர்ந்து இடம் பெற்ற வண்ணம் இருந்தமையும், ஒரு வாகனத்தினை இன்னொரு வாகனம் கடப்பதற்கு இவ்வீதியின் அகலம் போதாமையின் காரணமாகவும், போக்குவரத்தில் பாரிய பிரச்சினைகளை இவ்வீதியால் பயணிக்கும் வாகனச் சாரதிகள் முதல் பாதசாரிகள் வரை எதிர்நோக்க வேண்டிய வண்ணம் இருந்தது.

இந்நிலையில், மேற்படி வீதியினை அகலமாக்க வேண்டிய ஒரு கட்டாய நிலைமை ஏற்பட்டதன் பயனாக தற்போது மேற்படி வீதியினை மிருசுவில் முதல் ஓமந்தை வரை அகலமாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் மீண்டும் முன்பு அமைக்கப் பெற்ற வீதியும், வீதியினைச் செப்பனிடும் பணியும் இடம்பெறுவது என்ற கோட்பாட்டில் இவ்வேலைத்திட்டம் கடந்த வருடம் எட்டு ஒப்பந்தக்காரர்களிடம் கையளிக்கப்பட்டது.

இருப்பினும் மேற்படி பணியானது ஆமை வேகத்திலேயே இடம்பெற்று வருவதனைத் தற்போது காணக் கூடியதாகவுள்ளது. உதாரணமாக இவ்வீதிகளின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் கிளிநொச்சி டிப்போச் சந்தி முதல் இரணைமடுச் சந்திக்கப்பால் வரை இவ் ஏ-9 வீதி மிகவும் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் அன்று தொட்டு இன்றுவரை குன்றும் குழியுமாக சீர்கெட்டிருப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணிப்பதென்பது மிகவும் சிரமமானதாகவே உள்ள நிலையில் இவ்வீதிப் புனரமைப்புப் பணியானது எவ்வாறு திட்டுமிட்டு செயற்படுத்தப்படுகின்றதென்பது புரியாததொன்றாகவே உள்ளது.

அத்துடன் மேற்படி வீதிகள் புனரமைக்கப்படும் பொழுது நீர் வடிகால்கள் அமைக்கப்படாத பட்சத்தில் மாரிகாலங்களில் மழைவெள்ளம் தேங்கி நின்று வீதியைக் குறுக்கறுத்துப் பாயும் நிலையும் அதன் காரணமாக வீதிகள் மீண்டும் சீர்கெடும் நிலையும் உருவாவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

இந்நிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களை அரச செயலகத்தில் சந்தித்து உரையாடிய பொழுது வீதி புனரமைப்பின் மந்த நிலையினையும் வேலைகளின் தன்மைகள் திருப்திகரமானதாக இருப்பதாகத் தெரியவில்லையெனவும், தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளதுடன் வீதிப்புனரமைப்புப் பணிகளை ஒப்பந்தகாரர்களை விரைவாகவும், திறம்படவும் மேற்கொள்ளப் பணிக்கும் வண்ணம் அவ்வதிகாரிகளுக்கு அரச அதிபர் பணித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.






எனவே ஏ.9 வீதிப் புனரமைப்புப் பணி என்பது அனைத்து விடயங்களும் நன்கு ஆராயப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும். அவ்வாறு இல்லாது போனால் இந்தப் பிரதான வீதிப் புனரமைப்பு என்பது எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளைப் பெற முடியாது விலகிப் போய்விடக் கூடியதாகவே அமைந்துவிடும்.

இருந்தும் மேற்படி வீதி உறுதியானதாகவும் உத்தேசிக்கப்பட்ட காலப்பகுதிக்கு உகந்ததாக அமையுமா அல்லது ஆரம்பத்தில் தற்காலிகமாகப் புனரமைக்கப்பட்ட ஏ-9 வீதி போன்று அமையுமா என்பதுதான் இன்றைய கேள்விக் குறியாக அமைந்துள்ளது.

-கனகபுரச் சோதி-

# வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாகம்

# சனாதிபதியின் நிலை விரைவில் தெரியவரும்!

## பொ.ஐ.மு.ஏற்காதென்கிறார் அமுனுகம

**வடக்கு - கிழக்குப் பகுதியில் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டுமென்று விடுதலைப்புலிகளின் கோரிக்கை தொடர்பாக, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிக விரைவில் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கவுள்ள அதேநேரம், இக் கோரிக்கைக்கு பொது சன ஐக்கிய முன்னணி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.**

டோக்கியோ மாநாட்டிற்கு முன்பு, முழு அதிகாரம் கொண்ட இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்ஹெல்கேசனுக்குத் தெரிவித்திருந்தார்.

புலிகளின் இந்தக் கோரிக்கை ஏற்க முடியாது எனத் தெரிவித்த பொது சன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத அமுனுகம இதுபற்றிக் கூறுகையில்; புலிகள் தங்களை இராணுவ பலத்திலும், அரசியல் ரீதியிலும் பலப்படுத்த முற்படுவதையே இது காட்டுகின்றது. அதனால் அவர்களது இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட வேண்டும். இந்த கோரிக்கையை எமது கட்சி நிராகரிக்கின்றது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட எந்தவொரு அரசும், இந்தக்கோரிக்கைக்கு உடன்படாது.

சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொண்ட அரச தரப்பைச் சேர்ந்தவர்களின் முட்டாள் தனத்தால் புலிகளின் தந்திரத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

புலிகள் ஆயுதங்களைக் கைவிடாதவரை அவர்களிடம் இவ்வாறான நிர்வாகத்தை ஒப்படைப்பது என்பது கேலிக்குரியது.

இலங்கையின் அரசியல் யாப்புக்குப் புறம்பாக இடைக்கால நிர்வாக மொன்றை அமைக்கப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு புலிகள் அழுத்தம் கொடுக்கின்றார்கள்.

இதற்கு பொதுசன ஐக்கிய முன்னணி ஜே.வி.பி. தேசிய வாதிகள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சின்னம் சூட்டும் விழா

எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் "அவத்தை" 1இல பயிற்சி பெற்ற சாரணை ஆசிரியர்களுக்கான சின்னம் சூட்டும் விழாவும்,சான்றிதழ் வழங்கும் வைபவமும நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு முல்லைத்தீவு வலையக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

(20)

# ரஷ்ய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் சிறிலங்காவிற்கு விஜயம்

(கொழும்பு)

ரஷ்யாவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான குழு சிறிலங்காவுக்கு விஜயம் செய்துள்ளது.

சிறிலங்காவில் மூன்று நாட்கள் தங்கியிருக்கும் இவர்கள் படைத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவையும், அவ் அமைச்சின் அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ளனர்.

ராணுவ ரீதியில் பரஸ்பர தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்வதன் ஊடாக சிறிலங்காவுக்கு உதவுவது குறித்து ஆராய்வதே இந்தக் குழுவின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# படையினருக்குத் தகவல் கொடுப்போர்

# அநாவசியமாக வீதிகளில் நடமாட வேண்டாம்

## மட்டு. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

(மட்டக்களப்பு)

இராணுவ தேசிய துணைப் படையைச் சேர்ந்தவர்களையும் படையினருக்குத் தகவல் வழங்கி வருவோரையும் அனாவசியமாக வீதிகளில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களையடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் சிறிலங்காப் படையினருடன் இணைந்து செயற்பட்டுவந்த 27பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் மட்டக்களப்பு நகரின் பாதுகாப்பும் சோதனை நடவடிக்கைகளும் அதிகரிக்கப்படவுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# தொழில் வழிகாட்டல் செயலகம் இயங்குகிறது

(அலுவலக செய்தியாளர்)

தேசிய கைத்தொழில் அதிகார சபையின் கிளி.முல்லை மாவட்ட தொழில் வழிகாட்டல் உத்தியோகஸ்தராகவும், முல்லை மாவட்ட தொழிற் பயிற்சி பரிசோதகராகவும் தே.இரத்தினகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் மாத ஆரம்பமுதல் புதன் கிழமையிலும் அடுத்து இரண்டு புதன்கிழமைகளிலும் கிளி. கனகபுரம் கி.அ.சங்க மண்டபத்தில் அமைந்துள்ள காரியாலயத்தில் மக்கள் சந்திப்புக்களை மேற்கொள்வார்.

கடந்த 1996ஆம் ஆண்டுமுதல் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்படி செயலகம் செயற்பெறாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## -ரணில்-சந்திரிகா முரண்பாடு-

# மகாபொல புலமைப்பரிசில் வழங்க முடியாத நிலை

சனாதிபதி நிதியத்திலிருந்து நிதி விடுக்கப்படாமையையடுத்து மகாபொல புலமைப்பரிசில் வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதனால் 14000 பல்கலைக்கழக மாணவர்களில் 7000 பேருக்கு மகாபொல வழங்குவது தாமதம் அடைந்துள்ளது.

# புதுக்குடியிருப்பு நகரில் பொது மலசலகூடம் வேண்டும்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் பொது மலசல கூடம் இன்மையால் மக்கள் தொடர்ந்தும் அவலப் படுகின்றனர்.

புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் ஓர் பொது மலசலகூடம் இன்மையால் வர்த்தகர்கள் நகரப்பகுதிக்கு வருகை தரும் மக்கள்படும் அவலம் சொல்லில் அடங்காது. இவ் விடயம் குறித்து யாரும் கவனம் எடுப்பதாகவும் தெரியவில்லை.

இதனால் நகர சுகாதாரம் மிக மோசமாக பாதிக்கப்படும் சந்தர்ப்பம் உள்ளது.

கடந்த 06ஆம் திகதி அன்று புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம் பெற்ற எமது விசேட கூட்டத்திற்கு வருகை தந்திருந்த பிரதேச சபையினரிடமும் நாம் இக்கோரிக்கையை முன் வைத்தோம்.

ஆனால் இன்று வரையும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இது எமக்கு வேதனையைக் கொடுத்துள்ளது என புதுக்குடியிருப்பு வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

(26)

# குடியிருப்பு மக்களுக்கு கூரைத்தகடுகள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் கிளிநொச்சி மாவட்ட மனிதமுன்னேற்றநிலையத்தின் உதவியுடன் 20-05-2003 அன்று வீட்டிற்கான கூரைத்தகடுகள் வழங்கப்பட்டன.

வீடொன்றுக்கு இருபது கூரைத் தகடுகள் வீதம் அக்கராயன் கரிதாஸ் குடியிருப்பிலுள்ள 30 வீடுகளுக்கு இரண்டு இலட்சத்து நாற்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான ஊரைத்தகடுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிளி.மாவட்ட மனித முன்னேற்ற நிலைய உதவி இயக்குனர் அருட்தந்தை றோய் அடிகள் நிலைய இயக்குனர் கணேசபிள்ளை, அக்கராயன் வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் வேந்தன் அக்கராயன் காவல் பணிமனை உபபரி சோதகர் விஜயகுமார், அக்கராயன் பிரதேச த.பு.க சார்ந்த நல்லையா, அக்கராயன் அபிவிருத்தி நிறுவன பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

## தொற்றுநோய் அபாயம்

மாத்தறை மாவட்டத்தில் வெள்ளம் தணிந்துள்ளதால் தொற்றுநோய்கள் பரவும் அறிகுறிகள் ஏற்பட்டு வருவதாக சுகாதாரப்பகுதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.நிவாரணப் பணிகளுக்காக இந்திய மருத்துவக் குழுவினர் மாத்தறை மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு தொழில் நலன்புரி அமைச்சர் லஷ்மன் யப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.


## உந்துருளி விற்பனைக்கு

### HERO HONDA (SPLENDER)

தமிழீழ வைப்பகத்தின் பயன்பாட்டிலுள்ள உந்துருளி விற்பனை செய்வதற்கு கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன. இதற்கான வேண்டுகைகள் உரிய கேள்விப் படிவங்களில் விலை விளக்கத்தைக் குறித்து 02.06.2003 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். உந்தூர்தியைப் பார்வையிடவும், மேலதிக விளக்கங்களைப் பெறவும், பணிநாட்களில் இல. 232, திருநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

*மேலாளர்,*
*ஆளுகைப் பகுதி,*
*நடுவப்பணியகம்,*
*தமிழீழ வைப்பகம்.*

(சி-8122)


## இலவச தையல் பயிற்சி நெறி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மன்னார் ஆண்டான் குளம் கிராமத்தில் 30க்கும் மேற்பட்ட இளம் பெண்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இலவச தையல் பயிற்சி வழங்கப்பெற்று வருகின்றது.

மேற்படி பயிற்சிக்கான தையல் இயந்திரங்களையும் பயிற்சிக்கான செலவினங்களையும் சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## 31 ஆம் நாள் நீங்காத நினைவுகள்

மண்ணில் 26 05 1990



விண்ணில் 25 04 2003

### செல்வி. பிரதீபா தவராசா
### (தீபா)
### (இல.72 கட்சன் வீதி, வட்டக்கச்சி)

அன்பே உருவான தீபமே
அறிவே மேலான செல்வமே
சிரித்து வரும் உன் சிறிய
சிரிப்பினிலே கடவுளைக் கண்டோமம்மா.
எம் குடும்ப அகல்விளக்கின்
ஒளியாய் இருந்த தீபமே
"எங்கள் தீபாவே"
உந்தன் பிரிவு எமை வாட்டுதம்மா
இனி நீயே எம் தெய்வம்.
உந்தன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

25-05-2003 இன்று நடைபெறும் எமது அன்பு மகளின் 31ம் நாள் நினைவிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அப்பா,தவராசா
தம்பி,வசந்தகுமார்
வைரநாதன் குடும்பத்தினரும்.

(3285)





## பயணியர் பேருந்துப் புதிய பணி



கிளிநொச்சி, பரந்தன், இயக்கச்சி, புதுக்காட்டுநகர், பளை வழித்தடத்தில் 01.06.2003 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

### கிளிநொச்சி — முகமாலை

| | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுச்சந்தி | முகமாலை (பளை) |
|---|---|---|---|---|---|
| பகல் | 03.30 | 03.45 | 04.20 | 04.30 | 04.45 |

### முகமாலை (பளை) — கிளிநொச்சி

| | முகமாலை(பளை) | புதுக்காட்டுச்சந்தி | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| காலை | 07-30 | 07.45 | 08.20 | 08.30 | 03.45 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

## பயணியர் பேருந்துப் புதிய பணி

முல்லைத்தீவு மந்துவில், புதுக்குடியிருப்பு, விசுவமடு, பரந்தன், புதுக்காட்டுநகர், பளை வழித்தடத்தில் 01.06.2003 ஆம் நாள் பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

### முல்லைத்தீவு — முகமாலை

| | முல்லைத்தீவு | புதுக்குடியிருப்பு | விசுவமடு | பரந்தன் | புதுக்காட்டுச்சந்தி | முகமாலை (பளை) |
|---|---|---|---|---|---|---|
| பகல் | 12.15 | 01.00-01.30 | 02.30 | 03.30 | 03.55 | 04.15 |

குறிப்பு:- புதுக்குடியிருப்பு பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வந்தடையும் நேரமும், புறப்படும் நேரமும் தரப்பட்டுள்ளது

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி.8125)



**சிந்தனைக்கு**

சுதந்திர எழுச்சியின் உந்துதலால்தான்
மனித வரலாற்றுச் சக்கரம் சுழல்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 25-05-2003

## எல்லைகள் மாற வேண்டும்

விடுதலைப்புலிகள் கோரியுள்ள இடைக்கால நிர்வாக கட்டமைப்புக் குறித்து நோர்வே, ஜப்பான் போன்ற நாடுகளிடம் சிறிலங்கா அரசாங்கம் ஆலோசனை கோரியிருப்பதோடு, விடுதலைப்புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்து வரவும் இந்நாடுகளின் உதவியை நாடியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது ஒருவகையில் பொருத்தப்பாடானதொன்றே. ஏனெனில், சமாதான முயற்சிகளில் ஆரம்பம் முதலே ஏற்பாட்டாளராக நோர்வே செயற்பட்டு வருவதினாலும், இடையில் பிரவேசித்ததாயினும் சமாதான முயற்சிகளில் தீவிர முயற்சிகளில் ஜப்பான் ஈடுபட்டமையினாலும் முதலில் இவ்விரு தரப்பிடமும் ஆலோசனை கோரியிருப்பதைத் தவறு என்று கூறிவிடமுடியாது.

ஆனால், சிறிலங்காவின் கோரிக்கைக்கு இணங்க நோர்வேயும், ஜப்பானும் தமது ஆலோசனைகளை வழங்க முன்வரின் அந்நாடுகள் சில அடிப்படையான விடயங்களில் அக்கறை செலுத்த வேண்டும். அவ்வாறு இல்லாது சிறிலங்கா அரசின் நிலைப்பாட்டில் நின்று கொண்டு ஆலோசனைகளை வழங்க முன்வரின் அது பயன் தர மாட்டாது. அது கால விரயத்தையும் பொருள் விரயத்தையுமே ஏற்படுத்தக் கூடியதாகும்.

அதாவது, சிறிலங்கா அரசியலில் இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சியானது சாண் ஏற முழம் சறுக்கும் விடயமாகவே உள்ளது. அவ்வாறு இல்லாதுவிடின் சமஷ்டி அமைப்பு முறை பற்றிப் பரிசீலிப்பதற்கு ஒப்புக் கொண்டு பேச்சுவார்த்தைகளை நடாத்திவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், வடக்கு-கிழக்குப் புனர்வாழ்வுப் பணிகளை பிரதேச சபைகள், உள்ளூராட்சி சபைகள் மூலம் மேற்கொள்வது பற்றியதொரு வரைபை விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைத்திருக்கமாட்டாது.

இவ்வரைபை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கெல்ஹேசனும் சேர்ந்து உருவாக்கியதாகக் கூறப்படுகின்ற மையானது, சிறிலங்கா அரசாங்கத்தின் அரசியல் சிக்கலுக்குள் அவரும் சிக்கிக் கொண்டுவிட்டார் என்பதேயே வெளிக்காட்டுவதாகவுள்ளது. அவ்வாறு இல்லாதுவிடில், மாகாணசபை அமைப்பை நிராகரித்த விடுதலைப்புலிகளிடம் பிரதேசசபைகள் உள்ளூராட்சிச் சபைகள் பற்றியதொரு பரிந்துரையை அரசாங்கத்தின் பேச்சைக் கேட்டு திரு. கெல்ஹேசன் முன்வைக்க வந்திருக்கமாட்டார். ஏனெனில் இது 'சிரானின்' பணிக்கான மாற்று ஏற்பாடு என்பதல்ல, ஒன்றையாட்சி முறைக்குள் நின்று சிந்திக்கும் அரசின் பிற்போக்குத்தனமான நடவடிக்கையாகும்.

இலங்கையில் சுமார் கால் நூற்றாண்டுகளாக தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தினை ஏன் நடத்தினர் என்பது அனைவருக்கும் தெரியும். இம்மக்கள் சிறிலங்கா அரசியல்யாப்பு தமக்குப் பாதகமானது என நிராகரிப்பதோடு, இவ் அரசியல் யாப்பிற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்றும் தெரிவிக்கின்றனர். விடுதலைப் புலிகளுடன் சமஷ்டி ஆட்சி அமைப்பு முறை பற்றிப் பேசிக் கொண்டு ஒற்றையாட்சி அரசியல் யாப்பிற்குள் இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பற்றிச் சிறிலங்கா அரசாங்கம் சிந்திப்பதானது, ஒருபுறம் மோசடித்தனமானதும், மறுபுறம் சிறுபிள்ளைத்தனமானதும் கூட.

ஆகையினால், விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்தல், டோக்கியோ மாநாட்டிற்கு விடுதலைப்புலிகளை அழைத்துச் செல்லுதல் போன்றவற்றிற்கான ஆலோசனைகளை வழங்குபவர்கள் அன்றி முயற்சிகளை மேற்கொள்கின்றவர்கள் முதலில் சிறிலங்கா அரசிற்குச் சில ஆலோசனைகளைத் தெரிவிக்க வேண்டும். அதாவது முன்னேற்றகரமாகச் சிந்தியுங்கள், செயற்படுங்கள் என்பதே அதுவாகும்.

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் பங்கேற்பதோ அன்றி டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதோ இதன் அடிப்படையிலேயே இருக்க முடியும். அதாவது அரசாங்கம், ஒற்றையாட்சி அமைப்பிற்கு வெளியில் நின்று கொண்டும் - சமாதான முயற்சிகளில் சமபங்குதாரர்களான விடுதலைப்புலிகளின் உணர்வுகளையும், பங்களிப்பையும் கௌரவிக்கும் வகையிலும் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

அவ்வாறானதொரு முன்னேற்றகரமான நிலை தென்படும்பட்சத்திலேயே சமாதான முயற்சிகளை மீளத்தொடர்வது அர்த்த முள்ளதொன்றாக இருக்கும். அவ்வாறு இல்லாது விடில், சமாதானத்தின் பெயரில் மக்களை ஏமாற்றும் மோசடித்தனமான நடவடிக்கையாகவே இது இருக்கும். இதனால், மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வருமாறு நோர்வேயோ அன்றி ஜப்பானோ அன்றி வேறு யாரோ புலிகளை அழைப்பதிலும் அர்த்தமிருக்க மாட்டாது.

அதாவது, நோர்வேயும் சரி, ஜப்பானும் சரி, சிறிலங்கா அரசுடன் கலந்து பேசிவிட்டு முன்னேற்றகரமான திட்டம் எதுவுமின்றி விடுதலைப்புலிகள் மீண்டும் பேச்சிற்கு வரவேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதிலோ, புனர்வாழ்வு-புனரமைப்புப் பணிகள் பாதிப்பிற்குள்ளாகும் எனக் கூறுவதினாலோ இவ்விவகாரத்தில் பயன் எதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஆகையினால் ஆலோசனைக்கென அழைக்கப்படுபவர்கள் - அன்றித் தாமாகவோ ஆலோசனை கூற விழையும் வெளிநாட்டு அரசுகள் சிறிலங்கா அரசாங்கம் முன்னேற்றகரமாகச் சிந்திக்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும். அதுவே சமாதான முயற்சிகளை முன் நோக்கி நகர்த்த உதவுவதாக இருக்கும்.

# புங்குடுதீவில் திருடப்பட்ட மோ. சைக்கிள் வட்டக்கச்சியில் காவல்துறையால் மீட்பு!

(வட்டக்கச்சி)

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தில் திருட்டுப் போன மோட்டார் சைக்கிள் (**MD 90**) வட்டக்கச்சி காவல் பணியினரால் மீட்கப்பட்டுள்ளது. மேற்படி சம்பவமானது, கந்தையா பால சிங்கம் என்பருடைய சுமார் 1,25000 பெறுமதியான மோட்டார் சைக்கிளும் 5125 ரூபா பெறுமதியான பொருட்களும் கடந்த வருடம் 21-07-2002 அன்று வீடு உடைக்கப்பட்டு திருட்டுப் போனது. அத்துடன் மோட்டார் சைக்கிளுக் குரிய ஆவணங்களும் திருட்டுப் போனது **MD90, NPGK**1803 என்ற இலக்கமுடைய மோட்டார் கைக்கிளை திருடர்கள் தமது பாவனைக்காக 500-1803 என இலக்கமிட்டு பயன்படுத்தி வந்தார்கள். 21-05-2003 அன்றைய தினம் இது தொடர்பாக முறைப்பாடு செய்து அன்றைய தினமே மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது.அத்தோடு மோ. சைக்கிள் ஆவணங்களும் மீட்கப்பட்டன. சந்தேக நபர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

# வடக்கு-கிழக்கு நிர்வாக சபையை ரணில் அரசு ஏற்படுத்த வேண்டும்

## - தேசிய சனநாயக்கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகள் மற்றும் டோக்கியோ மாநாட்டில் புலிகள் கலந்து கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் பொருட்டு வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துமாறு பிரதமர் ரணில் தலைமையிலான அரசைக் கேட்பதாக தேசிய ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட்டால் அதனை சிங்கள மக்கள் உட்பட அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொண்டு சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபையை பெரும்பாலான இலங்கையர்களுடன் சர்வதேச சமூகமும் வரவேற்றுள்ளதாக அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் பொ.ஐ.முன்னணியின் நடவடிக்கைகளினால் சமாதான முயற்சிகள் முறிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் புலிகள் தமது ஆயுதப்பலத்தை உறுதி செய்யக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மண்ணெண்ணெய்,மெழுகுதிரி,குடிநீர் திடீர் விலையேற்றம்!

இரத்தினபுரியில் மண்ணெண்ணெய் போத்தல் ஒன்றின் விலை 45 ரூபா தொடக்கம் 55 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் பெய்த அடைமழையால் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு போன்ற அனர்த்தங்களினால் இரத்தினபுரி நகரிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் அனைத்தும் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இதனால் எரிபொருட்களைப் பதுக்கியே இவ்வாறு விலை கூடுதலாக விற்கப்படுகின்றது.அத்துடன் மெழுகுதிரியின் விலையும் இங்கு அதிகரித்துள்ளது. குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதால் குளிர்பானம், மற்றும் சுத்திகரிக்கப் பட்டபோத்தல் நீரின் விலை என்பனவும் அதிகரித்துள்ளது.

இதனால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கூறப்படுகின்றது.

# இந்திய மீனவர் 9 பேர் கைதின் பின் விடுதலை

(மன்னார்)

தலைமன்னார்க் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் ஒன்பது பேர் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மீரிகம தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மேற்படி மீனவர்களால் பயன்படுத்தப்பட்ட 'ட்ரோலர்' படகு சிறிலங்கா கடற்படையினரால் இழுத்து வரப்பட்ட போது கடலில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் மேற்படி படகை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு மன்னார் மாவட்டப் பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (மி)

## 26 இந்தியர்கள் கைது

சட்டவிரோதமாக இத்தாலி செல்லமுயன்ற 26 இந்தியர்களை சிறிலங்காப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் படகுகள் மூலம் இத்தாலி செல்வதற்கென்று பல இலட்சம் ரூபாய்களை பிரயாண முகவர்களுக்கு வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை விளக்கமறியலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தில் சிறிநாத்தைப் பங்கேற்க வலியுறுத்து!

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாட இருக்கும் இந்திய கிரிக்கெட் அணியில் சிறிநாத் இடம் பெறவேண்டும் என இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கங்குலி விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சிறிநாத் டெஸ்ட் போட்டிகளில் இனி பங்கேற்கப் போவதில்லை என அறிவித்துள்ளமையுடன் ஒரு நாள் போட்டிகளிலும் பங்கேற்பது குறித்து விரைவில் முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ள நிலையில், இந்திய அணி வரும் டிசம்பர் மாதம் அவுஸ்திரேலியாவுக்குப் பயணமாகவுள்ளது.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள கப்டன் கங்குலி,சிறிநாத் போன்ற திறமையான வேகப்பந்து வீச்சாளர்கள் இந்திய அணிக்கு மிகவும் அவசியம் எனக் கூறியுள்ளார்.அத்துடன் பலம் வாய்ந்த அவுஸ்திரேலிய அணியுடன் விளையாடுவதற்காக வரும் டிசம்பர் மாதம் அந்நாட்டிற்குச் செல்லவிருப்பதால், இதில் கலந்து கொள்ளுமாறு சிறிநாத்தைத் தாம கேட்டுக்கொள்ள விருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

விக்கெட் கீப்பரைப் பொறுத்தவரை தொடக்கமாகக் களமிறங்கக் கூடிய திறமையுள்ள ஒரு வீரர் இந்திய அணிக்குத் தேவைப்படுவதாகவும் கங்குலி கூறியுள்ளார்.




# சர்வதேச கிரிக்கெட் சபை நடுவர்கள் மீது பாய்ச்சல்

கடந்த வாரம் அன்டிகுவாவில் அவுஸ்திரேலிய மேற்கிந்தியத் தீவு அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டிகளுக்கிடையே நடுவர்கள் நடந்து கொண்ட முறை தவறானது என்று சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் மௌசன் குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளிலுள்ளஅன்டிகுவா நகரில் அவுஸ்திரேலிய-மேற்கிந்திய அணிகளிற்கிடையே நான்காவது டெஸ்ட் போட்டி நடைபெற்றது.

அப்போது அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் ரேஜாப் வீசிய பந்தை மேஇ.அணி தடுத்து ஆடியபோது அவருடைய முழங்காலில் பந்துபட்டுவிட்டது.

இதனையடுத்து சர்வான் ஆட்டம் இழந்ததாக அறிவிக்கப் பட்டதையடுத்து நேரப்பிற்கும் சர்வானுக்குமிடையே மோதல் ஏற்பட்டது.

அப்போது நடுவர்களாக டேவிட் எட்வேட்டும், வெங்கட்ராகவனும் இப்பிரச்சினையை முறையாகக் கைக்கொள்ளவில்லை. சர்வதேசகிரிக்கெட் சபையின் தலைவர் மௌசன் சம்பவம் நடைபெற்ற உடனே ஆட்ட களத்திலிருந்தவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்காதது மிகப் பெரிய தவறு என்று குறிப்பிட்டுள்ளார்.

# இரு பெண் கிராமசேவையாளர்கள் மீது சிறிலங்காப் படையினர் பாலியல் வல்லுறவு

(கொழும்பு)
கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த இரண்டு பெண் கிராமசேவையாளர்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய கடற் படையைச் சேர்ந்த ஒருவரும் பொலி சார் ஒருவரும் கைது செய்யப்பட் டுள்ளனர்.

மேற்படி இருவரும் பயணம் செய்த பாரஊர்தியில் வைத்தே இவ்விரு பெண் உத்தியோகத் தர்களும் பாலியல் வல்லுறவுக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட இரு பெண்களும் பொலிசில் முறைப்பாடு செய்ததை யடுத்தே குற்றவாளிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாலியல் வல்லுறவுக்குள்ளான இரு பெண் கிராமசேவையா ளர்களும் ஹபறணையைச் சேர்ந்த வர்கள் ஆவர்.

திருகோணமலையில் இருந்து, ஹபறணை நோக்கி பாரஊர்தியில் வந்து கொண்டிருந்த போதே இவ் விருவரையும் பாரஊர்தியில் பலாத் காரமாகக் கடத்தி பாலியல் வல்லு றவில் ஈடுபட்டுள்ளனர்.

# கிளி.ஜெயந்தி நகரில் திருடப்பட்ட நகைகள் காவல்துறையால் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)
ஜெயந்திநகர் பகுதியில் உள்ள பர்னாந்து மேரி றெயினா என்பவரது வீட்டில் திருட்டுப்போன நகைகள் தமிழீழக் காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 16ம் திகதி பகல் வேளையில் திருட்டுப்போன 30000 ரூபா பெறுமதியான தங்க நகை களே மீட்கப்பட்டுள்ளன. கொழும் பில் இருந்து வந்து பூநகரிப் பகுதி யில் தங்கியிருந்த நபர் ஒருவரே இத்திருட்டில் ஈடுபட்டிருந்தார். இவரை கிளிநொச்சி காவல் பணி மனையினர் கடந்த 17ம் திகதி சந்தேகத்தின் பேரில்கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

மேற்படி விசாரணைகளின் பின்னர் திருடப்பட்ட அனைத்து நகைகளும் மீட்கப்பட்டன. அதனையடுத்து சந் தேகநபர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார். (லோ)

# கட்டணங்கள் அதிகரிக்கும்

(கொழும்பு)
பேருந்து, தொடருந்து கட்ட ணங்களை அதிகரிக்க சிறிலங்கா அரசு நடவடிக்கைகளை மேற் கொண்டுவருகின்றது.

சிறிலங்காவின் போக்கு வரத்து அமைச்சு கட்டணங்களை அதிகரிப் பதற்கான யோசனையை அமைச் சரவைக்கு சமர்ப்பித்திருக்கின்றது.

அந்த யோசனைக்கு அனுமதி கிடைத்ததும் கட்டணங்கள் அதி கரிக்கப்படவுள்ளது.

# முல்லை.கல்வி வலய மெய்வல்லுனர் போட்டிகள்

முல்லை. கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான மெய்வல்லுனர் போட்டி நேற்றும் நேற்றுமுன்தினமும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது. இப்போட்டியில் 25 பாடசாலைகள் பங்கு பற்றின.

இதில் பாடசாலை மட்டத்தில் 241 புள்ளிகளைப் பெற்று புதுக் குடியிருப்பு மகாவித்தியாலயம் முத லாம் இடத்தையும் 157புள்ளிகளைப் பெற்று முள்ளியவளை வித்தியா னந்தாக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் 135புள்ளி களைப் பெற்று கொக்கிளாய் ம/வி மூன் றாம் இடத்தையும்பெற்றன. கோட் ரீதியில் 556 புள்ளிகளைப் பெற்று கரைதுறைப்பற்றுப் கோட்டம் முத லாம் இடத்தையும் 504 புள்ளிக ளைப்பெற்று புதுக்குடியிருப்பு கோட்டம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

இறுதி நிகழ்வாக வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் களை முல்லை. வலயக் கல்விப் பணிப்பாளர் க.குருகுலராசா அவர் கள் வழங்கினார். (26)

# 9.7 மில்லியன் நிதி உதவி

வெள்ளத்தினால்பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் அளிப்ப தற்காக ஜப்பான் 9.7 மில்லியன் ரூபாவினை வழங்கியுள்ளது.

வெள்ளநிவாரண அவசர பணிக்காக ஜப்பான் கடந்த 22ஆம் திகதி வழங்கிய 16.6 மில்லியன் பெறுமதியான பொருட்களுக்கு மேலதிகமாக இந்த உதவி வழங் கப்பட்டுள்ளது.

இதேவேளை வெள்ளத் தினாலும், மண்சரிவினாலும் பாதிக் கப்பட்ட மக்களுக்கு தாய்லாந்து அரசு உதவிகளை வழங்கவுள்ளது.

ஐநூறு தொன் நிவாரணப் பொருட்களுடன் அடுத்தவாரம் தாய்லாந்துக் கப்பல் கொழும்புக்கு வரவுள்ளது.

## மகளிர் அமைப்பு...

எங்கும் வாழும் அனைத்து மகளிர் அமைப்பு பிரதிநிதிகளும் இதில் கலந்து கொள்ள உள்ளனர்.

மன்னார் நகர மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும். (மி.லோ)

## இடைக்கால...

கால நிர்வாகம் ஒன்று குறித்து இணைக்கம் ஏற்பட வேண்டும் என்ற புலிகளின் நிலைப்பாடு நிராகரிக் கப்பட வேண்டும்.

அரசியல் யாப்பில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டுமாயின் அதற்கு சனாதிபதியின் ஒப்புதல் அவசியம்.அரசியல்யாப்புக்கு புறம் பாக ஒருஇடைக்கால அரசு அமைக் கப்படலாம் என்பது கேலிக்குரியது.

விடுதலைப்புலிகள் போன்ற பயங்கரவாத அமைப்பு முதலில் தனது தரப்பில் விட்டுக்கொடுப் புக்களைச் செய்யாத வரையில் அவர்கள் ஏகபோக ஆட்சியாளர் களாக இருக்கக் கூடிய ஒரு இடைக்கால நிர்வாகக் குழுவை அவர்களுக்கு வழங்குவது சாத் தியமில்லை.

அப்படிப்பட்ட இடைக்கால நிர்வா கம் வந்தால் யதார்த்தத்தில் அது ஒரு தனிநாடாகத்தான் செயற்படும்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க வின் அரசு சமாதான நடவடிக் கைகளை திறமையோடு கையாள வில்லை.விடுதலைப் புலிகளை பேச்சு வார்த்தை மேசைக்குக் கொண்டு வரும் நோக்குடனேயே நோர் வேயை அழைத்தேன். அவர்களுக் மத்தியஸ்தம் அல்லது சமரசம் செய்து வைக்கும் உரிமையை வழங்கவில்லை.

சிறிலங்காவின் இறையாண் மையைப் பாதிக்கும் வகையில் நோர்வே செயற்படுகின்றது. சமா தானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட விடுதலைப் புலிகளை ஜப் பான் அரசு வலியுறுத்தி வருவது அதிருப்தியை அளிக்கின்றது.

சமாதான முயற்சிகளில் ஜப்பானுக்கு வழங்கப்பட்டிருக்கும் அந்தஸ்து குறித்து தெளி வின்மை இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

# பணிநிலை வெற்றிடம்

**கிளிநொச்சி மாவட்டத்தின் அரசியல் செயலகங்களுக் கான பின்வரும் பணிநிலைகளுக்கான விண்ணப்பங் கள் கோரப்படுகின்றன.**

**01) கணக்குப் பதிவாளர்கள்**
க.பொ.த. உயர்தரம் சித்தி

**02) லிகிதர்கள்**
க.பொ.த.சாதாரணம் /க.பொ.த. உயர்தரம் சித்தி

**03) சிற்றூழியர்கள்**
எட்டாம் தரம் சித்தி

**04) சமையலாளர்கள்**

26-05-2003திங்கட்கிழமை காலை 9.00 - பி.ப.2.00 மணிவரை தேவையான ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**அரசியல்துறை,**
**கிளிமாவட்டச் செயலகம்,**
**சந்தை அருகாமை,**
**கிளிநொச்சி.**

(சி-7883)

# தவணை தப்பிய சி.க.கூ சங்கங்களுக்கான அறிவிப்பு

முல்லை. மாவட் சி.க.கூ சமாசத்திடம் கடன் பெற்று தவணை தப்பிய நிலையில் இயங்காதுள்ள சங்கங்களின் சமாசத்திலுள்ள வைப்புக்கள் அச்சங்கத்தின் கடன், வட்டி என்பவற்றிற்கு எதிராக கழிவு செய்யப்படவேண்டியுள்ளது. இயங்காதுள்ள சங்கங்களில் வைப்புச் செய்துள்ளவர்கள் தங்கள் வைப்புக்களை மீட்டுக்கொள்வதில் ஆர்வமாயிருப்பின் 2003-06-10 ஆம் திகதிக்கு முன் தங்கள் பகுதியிலுள்ள வெளிக்கள அலுவலகருடனோ, சமாசத்துடனோ தொடர்பு கொண்டு எதிர்வரும் 2003-06-30 ஆம் திகதிக்கிடையில் அச்சங்கங்களை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறு செய்யத்தவறுமிடத்து கடன், வட்டி என்பவற்றிற்கு எதிராக சேமங்கள் கழிவு செய்யப்பட்டு புதிய நிர்வாகிகளுடன் சங்கம் புனரமைக்கப்படும் என்பதை சங்கங்களின் நிர்வாகிகளுக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் அறியத்த ருகின்றேன்.

தகவல்:
**மாவட்டச் செயலாளர்,**
**சி.க.கூ. சமாசம்,**
**முல்லை. மாவட்டம்.**

(சி-7742)

## -சிறப்புற நடைபெற்ற -

# கருணாகரனின் கவிதைதொகுப்பு நூல்வெளியீட்டு விழா

கருணாகரனின் கவிதைத் தொகுப்பு நூலான ஒரு பயணியின் நிகழ்காலக்குறிப்புக்கள் வெளியீட்டுவிழா நேற்றுமாலை 3.30 மணியளவில் புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் சிறப்புற நடைபெற்றது.இந்நிகழ்வுக்கு கலை பண்பாட்டுக்கழகப்பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமைதாங்கினார். மங்கல விளக்கினை



தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு பொன்தியாகம் அவர்களும் அவரது துணைவியாரும் ஏற்றினர். தொடர்ந்து வெளியீட்டுரையை நிலாந்தன் ஆற்றினார். அடுத்து இடம் பெற்ற நூல் வெளியீட்டில் விடுதலைப்புலிகள் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன் வெளியிட்டு வைக்க திரு பாலசுப்பிரமணியம் பெற்றுக்கொண்டார். தொடர்ந்துஆய்வுரைகளை மூத்த கவிஞர் முருகையன், முல்லைக் கோணேஸ் ஆகியோர் ஆற்றினர்.தொடர்ந்து கருணாகரனின் நன்றி உரையுடன் நிகழ்வு மாலை 5.15 மணியளவில் நிறைவு பெற்றது. இதில் பெருமளவானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (26)

# புத்தூரில் புதிய படைமுகாம் அமைக்கும் பணியில் ராணுவம்

(யாழ்ப்பாணம்)
புத்தூரில் புதிய படைமுகாம் ஒன்றை அமைக்கும் பணிகளை சிறிலங்காப் படையினர் மேற்கொண் டுள்ளனர்.கால்நடை வைத்திய நிலையம் அமைக்க ஒதுக்கப்பட் டுள்ள இடத்தில் இம்முகாம் அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

படையினரின் இந்த முகாம் அமைக்கும் முயற்சியை வலி. கிழக்குவிவசாய சம்மேளனங்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித் துள்ளது.

# மல்லாகத்தில் படைமுகாம் அமைப்பது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்

## கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை

மல்லாகத்தில் படைமுகாம் அமைப்பதைத் தடுத்து நிறுத்தி நடவடிக்கை எடுக்கும்படி அப்பகுதி மக்கள் யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவிடம் கோரிக்கை விடுத் துள்ளனர்.

இந்தப் பிரதேச மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் பொதுமக்கள் அமைப்புக்கள் இது தொடர்பான மகஜர்களை கையளித்துள்ளனர்.

மல்லாகத்தில் படைமுகாம் அமைக்க எடுக்கப்படும் முயற்சி மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் என அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறிலங்கா..

எதிர்காலத்தில் சிறிலங்காவு டனான பாதுகாப்பு தொடர்புகள் குறித்து அதிக ஈடுபாடு கொள்ள வும் சிறிலங்காவின் அவசர தேவைகளுக்கு உதவவும் தாய் லாந்து தயாராக இருப்பதாக தயாசந்தகிரியிடம் தெரிவித்தார்.

# சாவு அறிவித்தல்

## இராமசேது முத்துராசா

நீர்வேலி வடக்கு நீர்வேலியைச் சேர்ந்த இராமசேது முத்துராசா 24-05-2003 அன்று நீர்வேலியில் காலமானார். அன்னார் அருளம்மாவின் அன்புக் கணவரும் விவேகானந்தன் (ஹொலண்ட்) சிவானந்தன் (சாவகச்சேரி) சதானந்தன் (பொதுமுகாமையாளர் விசுவமடு ப.நோ கூ. சங்கம்) நிற்குணானந்தன்(பிரதேச செயலகம் கரவெட்டி) சிவானந்தினி (கரவெட்டி) தயாநிதி (கிராமிய வங்கி நீர்வேலி) ஆகியோரின் அன்புத்தந்தையும், விஜயராணி (ஹொலண்ட்) சுபத்திரை (மகளிர் கல்லூரி அதிபர் சாவகச்சேரி) செல்வராணி (ஆசிரியை விசுவமடு ம.வி) தங்கேஸ்வரி (ஊரிக்காடு) சிவராசா (திக்கம் வடிசாலை கரவெட்டி) இரவிச்சந்திரன் (நீர்வேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். இறுதிக் கிரியைகள் 26.05.2003 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நீர்வேலி இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும் . இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
**மு.சதானந்தன்** (மகன்)
பொதுமுகாமையாளர்,
ப.நோ.கூ. சங்கம்,
விசுவமடு.

(2285)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.